
# வெள்ளி

## வரலாறும் பண்பாடும்




*பதிப்பாசிரியர்*

**க. சுந்தரலிங்கம்**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வன்னி - வரலாறும் பண்பாடும் |
| பதிப்புரிமை© - பதிப்பாசிரியர் | : | க. சுந்தரலிங்கம் |
| முதற்பதிப்பு | : | 2014 ஜுலை |
| பக்கங்கள் | : | xx + 655 |
| மின்னஞ்சல் | : | contact@vanninet.info |
| நூல் கிடைக்குமிடம் | : | குமரன் பப்ளிஷர்ஸ்<br>நெ. 3, மெய்கை விநாயகர் தெரு,<br>வடபழநி, சென்னை - 600 026. |


"இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய படைப்பாளிகளே முழுப் பொறுப்பாகும்.''

-பதிப்பாசிரியர்


| | | |
|---|---|---|
| **TITLE OF THE BOOK** | : | **Vanni - History & Culture** |
| **PUBLISHER & COPYRIGHT ©** | : | **K. Suntharalingam** |
| **ISBN** | : | **978-82-303-2572-8** |
| **FIRST EDITION** | : | **2014 July** |
| **PAGES** | : | **xx + 655** |
| **E - MAIL** | : | **contact@vanninet.info** |
| **COPIES AVAILABLE AT** | : | **KUMARAN PUBLISHERS**<br>No. 3, Meigai Vinayagar Street,<br>Vadapalani, Chennai - 600 026. |



# பிரித்தானியர்கால வன்னி இராச்சியம்

செல்வி யோ. அனித்தா
உதவி விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

## அறிமுகவுரை

இலங்கையினுடைய புராதன இராச்சியங்களின் வரலாற்றில் வன்னி இராச்சிய வரலாறும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையின் வடபகுதியின் வடக்கே ஆனையிறவு பரவைக்கடலையும் கிழக்கே முல்லைத்தீவுக்கடலையும் தெற்கே நுவரகலாவிய மாவட்டத்தையும் மேற்கே மன்னார் கடலையும் எல்லைகளாகக்கொண்ட பிரதேசமே அடங்காப்பற்று எனப்படும் வன்னி ஆகும். இப்பிரதேசத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பூர்வீகமக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியற்சான்றுகள் காணப்படுகின்றன. புவியியல் அமைப்பு, இயற்கைச்சூழல் மற்றும் சமூகவாழ்க்கை காரணமாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் யாவருக்கும் அடிபணியாமல் சுதந்திர மாக வாழ்ந்திருந்தனர். குறிப்பாக வடக்கிலமைந்த யாழ்ப்பாண ஆட்சியினருக்கோ தெற்கிலமைந்த சிங்கள ஆட்சியினருக்கோ அடங்காமல் இப்பிரதேசம் இருந்ததால் அடங்காப்பற்று எனப்பெயர் பெற்றது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட குடியேற்றத் தின் பயனாக தமிழ்நாட்டு மரபுக்கமைய "வன்னி" என அழைக்கப்பட்டு சுதந்திரமாக செயற்பட்ட இப்பிரதேசம் பண்டாரவன்னியனுடைய இறப்புடன் (1811 இன் பின்னர்) பிரித்தானியரின் ஏகாதிபத்தியத்திற்குள் தன் இறைமையை இழந்து கொண்டது. அவ்வகையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இப்பிரதேசத்தில் நிலவிய அரசியல், நிர்வாக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை வெளிநாட்டு ஆட்சியாளர்களது குறிப்புக்கள், காலத்திற்கு காலம் இப்பிரதேசத்தில் கடமையாற்றிய பிரித்தானிய ஆளுநர்கள், மாவட்ட ஆட்சித்துறை அதிகாரிகள், மாகாண அரசாங்க அதிபர்கள், மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் போன்றோரது தினக்குறிப்பு பதிவுகள் போன்றவற்றினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## அரசியல்

அடங்காப்பற்று எனப்படும் வன்னி இராச்சியத்தை ஆரம்பத்தில் ஆண்ட வன்னியர்கள் பனங்காமத்தை தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினர். பின்பு

முல்லைத்தீவைப் பிரதான தலைநகரமாக மாற்றினர். இவ் இராச்சியத்தை இரண்டு வகையானவர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. அதாவது வன்னியர்கள் எனப்படுவோரும் மற்றும் மாப்பாணர்கள் எனப்படுவோரும் ஆட்சிபுரிந்ததாக கூறப்படுகின்றது. இங்கு இவர்கள் குறுநில மன்னர்களாக ஆட்சிசெய்தபோதும் இப்பிரதேசம் சுதந்திரத்துடனும் இறைமையுடனும் திகழ்ந்தது. ஏறத்தாழ 2000 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட இப்பரந்த பிரதேசத்தை வன்னியரசர்கள் அரசர்களுக்குரிய இறைமையுடன் ஆட்சி செலுத்தியதை வரலாற்றுச் செய்திகளிலிருந்து அறியமுடிகின்றது.

இந்நிலையில் 16ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட ஐரோப்பியர்களின் வருகை வன்னி இராச்சிய வரலாற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. அதாவது இதுவரைகாலமும் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்த வன்னியர்கள் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் வருகையினால் படிப்படியாக தமது நிலையில் இருந்து தளர்ந்து இவர்களுடைய பீரங்கிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் அடிபணியும் நிர்ப்பந்தத்திற்குள்ளானர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களது ஆட்சியின் மேலாண் மையை வன்னியர்கள் ஏற்றிருந்தபோதும் வன்னி அரசர்கள் குறிப்பாக கையிலை வன்னியன் போன்றோர் தொடர்ச்சியாக எதிர்ப்புக்காட்டிய வண்ணமே இருந்தனர் என்பதனையும் அறிய முடிகின்றது. இருப்பினும் இப்பிரதேசம் பரந்த நிலப்பரப்பையும் குறைந்தளவு சனத்தொகையையும் போக்குவரத்து வசதிகளற்ற நிலையையும் கொண்டிருந்ததன் விளைவாக போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அதிகளவில் தங்களது கவனத்தைச் இப்பிரதேசத்தில் செலுத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கி.பி. 1796ஆம் ஆண்டு இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி ஆரம்பமானபோதும் கி.பி. 1802ம் ஆண்டிலே இலங்கை பிரித்தானியரின் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்தே வன்னி இராச்சியம் மீது பிரித்தானிய அரசின் கவனம் திரும்பியது. இக்கால கட்டத்தில் வன்னியை ஆட்சி புரிந்த பண்டார வன்னியன் தொடர்ந்தும் தனித்தியங்க முயன்றபோதெழுந்த முரண்பாட்டினால் பண்டார வன்னியனுக்கும் பிரித்தானியருக்கும் இடையே போர் மூண்டது. இப்பண்டார வன்னியனே வன்னி இராச்சிய மன்னர்களுள் இறுதிப் பெரு மன்னனாக குறிப்பிடப்படு கின்றான்.



பண்டாரவன்னியன் என்பவன் யார் என்பது பற்றியும் அவனது பிரதேசம் பற்றியும் முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அதாவது இவன் முல்லைத்தீவைச் சேர்ந்தவன் என்றும் நுவரகலாவி யாவைச் சேர்ந்தவன் என்றும் சிங்கள இனத்தவன் என்றும் முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. இருப்பினும் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் எனும் பெயர் இவன் தமிழ் இனத்தைச் சேர்ந்த வன்னி இராச்சியத்தின் தலைவன் என்பதை உறுதிப்படுத்துகின்றது. பண்டாரவன்னியன் குமிழமுனைக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் என்றும் அவனது தந்தையான வைரமுத்து வன்னியன் தஞ்சாவூரிலே இருந்து வைத்தியரையும் வேதாரணி

யத்தில் இருந்து சைவக்குருமாரையும் அழைத்து வந்து குமிழமுனைக் கிராமத்தில் குடியமர்த்தினான் என்றும் கூறப்படுகின்றது. இன்றும் குமிழமுனையில் பண்டாரவன்னியன் கிணறு, பண்டாரவன்னியன் வளவு என்பன அழிந்தநிலையில் உள்ளதாக அவ்வூர்வாசிகள் குறிப்பிடுகின்றனர். எனவே பண்டாரவன்னியன் அடங்காப்பற்று வன்னிக்குட்பட்ட குமிழமுனையில் குடியிருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

இம்மன்னனுடைய நடவடிக்கைகள் யாவும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங் களிலேயே இடம்பெற்றுள்ளன. இவனுடைய ஆட்சிபீடம் பண்டாரக்குளம் எனுமிடத்தில் அமைந்திருந்தது. இது ஒட்டுசுட்டானுக்கும் - நெடுங்கேணிக்கும் இடையே ஒட்டுசுட்டானிலிருந்து நான்கு மைல் தொலைவில் அமைந்துள்ளது. குமிழமுனைக்கு அண்மையில் தண்ணீர் முறிப்பு குளத்திற்கு அருகேயுள்ள குருத்தலூர் மலையில் அழிந்த நிலையில் காணப்படும் சைவக்கோயிலைச் சிலர் பண்டாரவன்னியனின் அரண்மனை எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு சிலர் இது அவனுடைய எல்லைக் கோட்டைகளில் ஒன்றாக இருக்கலாம் எனக்கருதுகின்றனர். எதுஎவ்வாறிருப்பினும் பண்டாரக்குளம் என்பதே இவனுடைய அரசியல்பீடமாக அமைந்திருந்தது என்பதே ஏற்புடையதாகும்.

பண்டாரவன்னியனின் காலத்தில் கண்டி இராச்சியத்தினூடான நட்புறவு மேலும் வலுவடைந்திருந்தது. இதனால் பிரித்தானியர்கள் முதன்முறை கண்டியைக் கைப்பற்றுவதாகப் படையெடுத்தபோது பண்டாரவன்னியன் தனது படைவீரர்களைத் திரட்டி கண்டி மன்னனுக்கு உதவியாக தன்படைகளை அனுப்பினான். இப்போரில் பண்டாரவன்னியனின் படைவீரர்கள் காட்டிய வீரம் பிரித்தானியரை அதிர்ச்சிக் குள்ளாக்கியதுடன் அவர்களின் படைகளை பின்வாங்கவும் செய்தது. இதனால் இக்காலகட்டத்தில் பிரித்தானியரின் கவனம் பண்டாரவன்னியனின் பக்கம் திரும்பியது. வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றினால் வன்னியர்களை அடக்குவதுடன் கண்டி மன்னனுக்கும் படையுதவி கிடைப்பதையும் தடுக்கலாம் என எண்ணி அதற்கான சூழ்ச்சி நடவடிக்கைகளில் பிரித்தானியர்கள் ஈடுபடலாயினர்.

அவ்வகையில் பண்டாரவன்னியன் கண்டி அரசனிடம் சென்ற சமயம் கரிக்கட்டுமூலை வன்னியான காக்கைவன்னியனைத் தம்வசமாக்கி அவன் ஆட்சிப்பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவில் ஒரு கோட்டையை அவசரமாக கட்டி முடித்தனர். இரகசியமாக இவ்வேலை மேற்கொள்ளப்பட்டதால் காலம் தாழ்த்தியே இச்செய்தி பண்டார வன்னியனுக்கு எட்டியது. உடனே பண்டாரவன்னியன் கி.பி. 1803ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் நாள் படையெடுத்துச் சென்று முல்லைத்தீவுக்கோட்டையையும் அரசாங்க இல்லத்தையும் தாக்கினான். இதன்போது கப்டன் வொண்டிறிபேக்கின் தலைமையில் முல்லைத்தீவில் இருந்த படைவள்ளங்கள் யாழ்ப்பாணத்திற்கு பின்வாங்கின. பண்டாரவன்னியன் பிரித்தானியரின் மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றி அங்கிருந்து எடுத்துச் சென்றான்.

இதனைத்தொடர்ந்து பிரித்தானியர் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து பிரித்தானியப் படைகளைத் திரட்டினர். இவர்கள் பண்டாரவன்னி யனைத் தோற்கடிப்பதாக திருகோணமலையிலிருந்து கப்டன் எட்வாட்மட்ஜ் தலைமை யிலான படை, யாழ்ப்பாணத்தில் இருந்து லெப்ரினன்யோன்ஜிவல் தலைமையிலான

படை, மன்னாரில் இருந்து கப்டன் வொன்றிபோர்க் தலைமையிலான படை போன்ற முப்படைகளைத் திரட்டினர். இவ் ஏற்பாட்டின்படி மூன்று படைகளும் மூன்று திக்குகளிலும் இருந்து பண்டாரவன்னியனைச்சுற்றி வளைத்து தாக்கவேண்டும் என்பது வொண்டிறி பேர்க்கின் திட்டமாகும்.

இவ்வாறு பிரித்தானியர்கள் படையெடுத்துவர இருப்பதை முன்கூட்டியே அறிந்திருந்த பண்டாரவன்னியன் திருகோணமலையிலிருந்து வரும் படைக்கு எதிராக குமாரசிங்க வன்னியன் தலைமையில் ஒரு படையைத்திரட்டி எதிர்த்தான். யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் படையைத்தானே தலைமைதாங்கி எதிர்த்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பண்டாரவன்னியன் மன்னாரிலிருந்து வரும் அந்நியப்படை பற்றி அறிந்திருக்கவில்லை. பிரித்தானியரும் தமது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக காக்கைவன்னியன் எனும் வன்னிச்சிற்றரசனுக்கு ஆசை வார்த்தைகூறி தமது கைக்குள் கொண்டுவந்து அவன் மூலம் பண்டாரவன்னியனது செயற்பாடு பற்றிய புலனாய்வு செய்திகளை அறிந்திருந்த னர். இதனால் காக்கைவன்னியனின் காட்டிக் கொடுப்புடன் மன்னாரில் இருந்துவந்த வொண்டிறிபேர்க் தலைமை யிலானபடை கி.பி. 1803ஆம் ஒக்டோபர் 31ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் பண்டாரவன்னியன் நித்திரையில் ஆழ்ந்திருந்தவேளை சுற்றிவளைத்தது. இதனால் இறுதிப்போர் கற்சிலைமடு எனும் கிராமத்தில் நடைபெற்றது. இதில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என இக்கிராமத்திலுள்ள நடுக்கல்லொன்று குறிப்பிடுகின்றது. இந்நடுக்கல்லில் எழுதப்பட்டிருப்பதாவது "HERE ABOUTS CAPTION DRIBER DEFEATED PANDARA VANNIYA 31ST OCT 1803". இதையடுத்துள்ள இடத்திலேதான் கப்டன்வொண்டிறிபேர்க் 1803 ஒக்டோபர் 31 இல் பண்டார வன்னியனைத் தோற்கடித்தான் என்ற ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பண்டாரவன்னியன் பிரித்தானியரிடம் தோற்கடிக்கப்பட்டான் என்ற செய்தி உறுதிசெய்யப்படுகின்றது. கி.பி. 1895 ஆம் ஆண்டு ஜே. பி. லூயிஸ் எனும் சிவில் சேவையாளர் எழுதிய வன்னிக் கைநூலில் போர் நடைபெற்ற இடத்திலேயே கல்வெட்டு பொறிக்கப்பட்டதெனவும் இதனாலேயே இக்கிராமத்தை கற்சிலைமடு என வழங்கப்பட்ட தாகவும் குறிப்பிட்டுள்ளார்.



பண்டாரவன்னியனைத் தோற்கடித்தமைக்காக வொண்டிறிபேர்க்கிற்கு பண்டார வன்னியனின் இராஜதானியான பண்டாரக்குளம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. குளமும் கிராமமும் 1865 ஆம் ஆண்டுவரை டிறிபேர்க்கின் சந்ததியினால் ஆளப்பட்டு வந்தது. 1803ஆம் ஆண்டு பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டபோதும் அவன் தன் எதிர்ப்பைக் கைவிடவில்லை. தொடர்ந்தும் 1810 மே மாதம் கண்டி பிரதானிகளின் உதவியுடன் கிழக்கு மூலைப்பகுதியில் தன் எதிர்ப்பைக்காட்டி படையெடுத்திருந்தான். இப்படையெடுப் பின்போது பண்டாரவன்னியனின் படையிலேயே 15 வீரர்களே இருந்தபோதும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இவனது துணிகரப்படையெடுப்பைக் கண்டு பயந்து வெடி வைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்தி யிருந்தது.

தொடர்ந்து 1810 செப்டம்பர் பண்டாரவன்னியன் கண்டித்திசாவையின் உதவியுடன் மீண்டும் அடங்காப்பற்று வன்னியைத் தாக்க இருப்பதாக வன்னிப்பகுதி கலெக்டர் ரேணருக்கு செய்தி எட்டியது. இதனால் திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து கூடுதலான பிரித்தானியப் படைகள் வரவழைக்கப்பட்டு வன்னியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் 1811 இல் பண்டாரவன்னியன் மீண்டும் அடங்காப்பற்று மீது தாக்குதலை மேற்கொண்டான். உடையாவூரில் நடைபெற்ற இக்கடுஞ்சமரில் பிரித்தானியரின் பீரங்கிகள், துப்பாக்கிகள் கொண்ட போர்நுட்பத்திற்கு மத்தியிலும் போராடி பண்டாரவன்னியன் இறுதியில் படுகாயம் அடைந்தான். இதனால் இவன் பனங்காமத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டான். ஆனால் மறுநாளே பண்டாரவன்னியன் இறப்பைத்தழுவிக்கொண்டான். இப்போரில் பிரித்தானியர் கைப்பற்றிய வன்னிப்படையி னரின் ஆயுதங்களில் கண்டி மன்னனின் முத்திரை பொறிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படு வதைக் கொண்டு கண்டியரசனின் படையுதவி, ஆயுத உதவி என்பன பண்டார வன்னியனுக்கு கிடைத்திருந்தமை புலனாகின்றது. எனவே, இறுதிவரை தமிழினத்திற்காக தன்னுயிரை அர்ப்பணித்த வன்னி இராசதானியின் இறுதிப்பெருமன்னனான பண்டார வன்னியனுடைய இறப்புடன் வன்னி இராச்சியம் முழுவதும் இலங்கை சுதந்திரம் பெறும்வரை பிரித்தானியரின் ஏகாதிபத்திற்குள் அடங்கியிருந்ததை அறியமுடிகின்றது.

## நிர்வாகம்

வன்னிப்பிரதேச நிர்வாக நடவடிக்கைகளை நோக்குகின்றபோது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பொதுவாக யாழ்ப்பாண அரசு கால நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இருப்பினும் காலத்திற்கு காலம் நிர்வாகம் இங்கு மாற்றமுற்றுச் சென்றமையையும் காணலாம். குறிப்பாக பிரித்தானியர் 1796 இல் இலங்கையின் கரையோர மாகாணங்களின் ஆட்சியைக் கைப்பற்றிய காலந்தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டின் முடிவுவரை வன்னிப் பிரதேச நிர்வாக முறைமைகளை ஆறு கட்டங்களாக வகுக்கலாம்.

1. சென்னையிலுள்ள ஆட்சிப்பீடத்தின் கீழுள்ள ஆமில்டார் நிர்வாகம்.
2. திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களுக்குப் பொறுப்பான கலெக்டர் நிர்வாகம்.
3. யாழ்ப்பாணப்பட்டிண நிர்வாகத்தின் கீழ் இறைவரி வர்த்தக ஏஜெண்ட் நிர்வாகம்.
4. வன்னி தனி மாவட்டமாக ஆக்கப்பட்ட பின் கலெக்டரின் கீழ் நிர்வாகம்.
5. வன்னிப்பற்றுக்கள் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மாவட்டங்களுடன் சேர்க்கப்பட்ட பின்னர் மாவட்ட நீதிபதியின் நிர்வாகம்.
6. முல்லைத்தீவு, வவுனியா, வன்னி மாவட்டமாகத் திரும்பவும் ஆக்கப்பட்ட பின்னர் உதவி அரசாங்க அதிபரின் நிர்வாகம்.

ஆரம்பகால ஆமில்டார் கரையோரத்தைச் சேர்ந்தவராக இருந்தார். இவர்களின் நிர்வாகத்தில் பொதுமக்கள் அடக்கியொடுக்கப்பட்டனர். சிறிய குற்றங்களுக்குப் பெருந்தண்டனை விதிக்கப்பட்டது. அதிகளவிலான வரியை அறவிட்டு மக்களை

துன்புறுத்தினர். 1801 இல் ஏபிரகாம் ஏவேட் என்பவரும் 1805இல் லாண்டேஸ் என்பவரும் ஆமில்டார்களாக நியமிக்கப்பட்டனர். ஆனால் இவர்களது நிர்வாகத்தில் மக்கள் துன்புறுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்துடன் வன்னிப்பிரதேசம் நிர்வாகரீதியாக இணைக்கப்பட்டபோது தேசாதிபதி சேர். தோமஸ்மெயிற்லாந்து யாழ்ப்பாணப்பட்டிண இறைவரிவர்த்தக வரிமுகவராக நியமிக்கப்பட்ட வில்லியம் மொன்கோமறிக்கு விடுத்த அறிவுறுத்தலில் "யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்னி பிரிக்கப்பட்டுத் தனிமாவட்டமாக ஆக்கப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம். இது நடைமுறைக்கு வரும்வரை உமது மாவட்டத்துடன் வன்னி இணைந்திருக்கும்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 1807 மே மாதத்தில் வன்னி தனி மாவட்டமாக்கப்பட்டது. இதன் தலைமைக்காரியாலயம் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டது. இக்காலத்தில் இருந்து 1813 வரை கலெக்டராக இருந்த ரேணரின் நிர்வாகம் வெற்றிகரமானது. இவர் சட்டநடவடிக்கை எதையும் மேற்கொள்ளாமலேயே நிலுவையிலிருந்த வரிகளை அறவிட்டார். வரி செலுத்தக்கூடிய நிலையில் இல்லாத ஏழை விவசாயிகளின் நிலுவைவரி அறவிடப்படவில்லை. நீர்ப்பாசனத் திட்டங்களின் அவசியத்தையும் இவர் உணர்ந்திருந்தார். பல நீர்ப்பாசனக் குளங்களைத் திருத்தினார். வன்னிப் பிரதேச கலெக்டர் நிர்வாகத்தைப் பொறுத்தவரை இவர் கண்டிப்பற்ற கொள்கையையே கடைப்பிடித்திருந்தார். இவர் வன்னிப்பிரதேசம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நிலைமைகளை நன்கு ஆராய்கின்ற பணியினையும் மேற்கொண்டிருந்தார்.

இவரையடுத்து பொயிட் (1813-1815) கலெக்டராக நியமிக்கப்பட்டார். இவர் மிகவும் கண்டிப்பான நிர்வாகி எனப் பெயர் பெற்று விளங்கியவர். தனக்கு கீழ் பணியாற்றி யோரை மிகக் கடுமையாகவே நடத்தினார். பொயிட்டை அடுத்து யோன் கோடன்போப் (1815-1817) பதவியேற்றார். இவர் காலத்தில் பல முன்னேற்றகரமான நிர்வாக முறைகள் புகுத்தப்பட்டன. காணிகளைப் பதிவு செய்யும் முறையை ஏற்படுத்தினார். கிராமத் தலைமைக்காரரும் கௌரவமான விவசாயிகளும் இவ்வமைப்பில் அங்கம் வகித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ளது போல் இந்த விவகாரங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்தார். அதாவது ஒருவர் இறந்த பின்னர் அவரின் பின்னுரிமைக்காரருக்கிடையே ஏற்படும் தகராற்றை தீர்த்து வைக்க இம்முறை பெரிதும் உதவியது. தொடர்ந்து ஹென்றி பெனல் (1817-1818) என்பவர் வன்னி மாவட்டத்தின் கடைசி கலெக்டர் நியமிக்கப்பட்டார். இவருடைய பதவிக்காலம் ஒரு வருடத்திற்கும் சற்றுக் கூடுதலாக இருந்தது.

தொடர்ந்து 1818ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் வன்னி தனி மாகாணமாக செயற்படுவது நீக்கப்பட்டு வன்னியில் இருந்து 17பற்றுக்கள் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மாவட்டங்களுடன் சேர்க்கப்பட்டது. குறிப்பாக வன்னியின் 5 பற்றுக்கள் மன்னாருக்கு வழங்கப்பட்டன. துணுக்காய், கருநாவல்பற்று வடக்கு, கருநாவல்பற்று தெற்கு, புதுக்குடியிருப்பு ஆகியன யாழ்ப்பாணத்துக்கு கையளிக் கப்பட்டன. எனவே முல்லைத்தீவு 01.05.1818 தொடக்கம் திருகோணமலை மாகாணத்திற் குரியதானது. இதனைத் தொடர்ந்து 1833 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிபதியின் நிர்வாகம்

ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட நீதிபதி வருமானத் திணைக்களத்தையும் சுங்க இல்லத்தையும் அமைத்து வருமானம், சுங்கக்கடமைகள் போன்றவற்றை மேற்கொண்டார். இக்காலத்தில் வன்னிப்பற்றுக்களில் ஐந்தினை ஏற்கனவே தன்னகத்தே கொண்டிருந்த மன்னாருக்கு கரிக்கட்டு மூலை வடக்கு, கரிக்கட்டு மூலை தெற்கு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கருநாவல்பற்று வடக்கு, கருநாவல்பற்று தெற்கு, மேல்பற்று வடக்கு, மேல்பற்று தெற்கு, மேல்பற்று கிழக்கு ஆகிய 9 பிரிவுகளும் உடையாவூர், கிழக்குமூலை வடக்கு ஆகியனவும் கையளிக்கப்பட்டன. இக்காலத்தில் கலெக்டர் என்னும் பதவி நீக்கப்பட்டு அரசாங்க முகவர் என்னும் பதவி உருவாக்கப்பட்டு டைக் என்பவர் வடமாகாண அரசாங்க முகவராக நியமிக்கப்பட்டார். இவர் 1839 நவம்பர் வரை இப்பதவியை வகித்திருந்தார்.

தொடர்ந்து 1845 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிபதி பதவி ரத்துச் செய்யப்பட்டு பொலிஸ் நீதிவானும் விண்ணப்ப ஆணையாளரும் என்னும் சிவில் சேவையின் கனிட்ட பிரிவின் நாலாவது வகுப்பைச் சேர்ந்த இப்பதவி, முன்னர் இருந்த பதவிக்கு பதிலாக உருவாக்கப்பட்டது. ஹென்றிபோல் என்பவர் இப்பதவிக்கு ஆகஸ்ட் மாதந்தொடக்கம் நியமிக்கப்பட்டார். ஹென்றிபோலும் அவரது பதவிக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்களும் யாழ்ப்பாண அரசாங்க முகவருக்கு வன்னி மாவட்டத்தின் உதவியாளர்களாகப் பணியாற்றினர். ஒவ்வொரு வருடமும் இலங்கைப் பஞ்சாங்கத்தில் சிவில் சேவையின் பகுப்பாய்வு வெளியிடப்பட்டபோது உதவி முகவர் என்னும் பதவி உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படாதிருந்தபோதும் ஹென்றிபோலே முதலாவது உதவிமுகவராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1895 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் பொலிஸ் நீதிபதியினுடைய ஆண்டுச்சம்பளம் 450 பவுணாக உயர்த்தப்பட்டதன் மூலம் சிவில் சேவையின் கனிஷ்ட பிரிவான மூன்றாம் வகுப்புக்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து 1867 ஆம் ஆண்டு ஜனவரி மாதந்தொடக்கம் சம்பளமாக 600பவுண் நிர்ணயிக்கப்பட்டு சிவில் சேவையின் கனிஷ்ட பிரிவின் இரண்டாம் வகுப்பிற்கு மாற்றப்பட்டதோடு உதவிமுகவர் என குறிப்பிடப்பட்டது.

இக்காலப்பகுதியில் மாவட்டத்தின் எல்லைகள் காலத்திற் காலம் மாற்றியமைக்கப் பட்டன. 1867 ஆம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதி தொடக்கம் கிழக்கு மூலை வடக்கும் உடையாவூர் பற்றும் மன்னாரிலிருந்து எடுக்கப்பட்டு வன்னி மாவட்டத்துடன் இணைக்கப் பட்டன. 1880 இல் துணுக்காய் மன்னாரிலிருந்து முல்லைத்தீவிற்கு மாற்றப்பட்டது. இவ்வேளையில் வவுனியாவுக்கெனப் புதியதோர் உதவி முகவர் பிரிவு உருவாக்கப்பட்டு முல்லைத்தீவு உதவி முகவர் பிரிவிலிருந்த பகுதிகள் வவுனியாவுடன் இணைக்கப்பட்டன. ஆனால், ஒரு உதவி அரசாங்க முகவரே இந்த இரு மாவட்டங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டதோடு அவரது தலைமைச் செயலகம் வவுனியாவில் அமைந்திருந்தது. உதவி அரசாங்க அதிபர் தமது கடமை நேரத்தினை இரு மாவட்டங்களுக்கும் சமமாகப் பங்கிட்டு ஒவ்வொரு மாதமும் முல்லைத்தீவிற்கு சென்று கடமையாற்றி வந்தார். சிவில் சேவையின் இரண்டாம் வகுப்பாக இருந்த இப்பதவி சிவில்சேவை மீளமைக்கப்படும் போது மூன்றாம் வகுப்பாக குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிரித்தானியர்கள் ஆமில்டார், கலெக்டர், இறைவரி வர்த்தக ஏஜென்ட், மாவட்ட நீதிபதிகள், உதவி அரசாங்க அதிபர்கள் போன்றோர்களைக் கொண்டு நிர்வாக

நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதும் முதலியார், உடையார், கிராம விதானை மார், நொத்தாரிசு, பட்டங்கட்டி, மரக்காயர் போன்ற உள்ளூர் பிரிவுத் தலைவர்களையும் நியமித்து நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

முதலிமார் என்போர் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகளை மேற்கொண்டனர். இவர்கள் இக்கடமைகளைச் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை கட்டணமும் விசேடபடியும் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிறப்பு அல்லது இறப்பு பதிவுக்கும் அரசாங்கத்தால் 25 சதமும் திருமணப்பதிவின் போது ஒரு பதிவுக்கு ரூபா 2.50ம் இரு பகுதியினராலும் வழங்கப்பட்டது. மேலும் முதலிமார் மரம் முதலியவற்றை பார்வையிடுவதற்கும் அடையாளம் பொறிப்பதற்கும் கட்டணம் அறவிட உரித்துடையவர்களாக இருந்தனர்.

உடையார் எனப்படுவோர் மரணவிசாரணை அதிகாரிகளாக நியமனம் பெற்றனர். இவர்கள் சேனைப்பயிர் செய்கைக்கான விண்ணப்பங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கட்டணம் அறவிட்டனர். அவ்வகையில் ஒவ்வொரு அறிக்கைக்கும் 50 சதவீதம் படி கட்டணம் வசூலித்தனர். வடமாகாணத்திற்கே பிரத்தியேகமானதாக அட்டவணைப்படுத்தப்பட்ட கட்டணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இவ்வுடையார்கள் பிஸ்கால் உத்தியோகத்தராகவும் செயற்பட்டனர். தடையுத்தரவின் போது கைப்பற்றப்பட்ட உடைமைகளை விற்கும் கடமைகளையும் ஆற்றினர்.

அடுத்து விதானைமார் எனப்படுவோரும் குறிப்பிடத்தக்க கடமைகளை ஆற்றியிருந்த னர். எனினும் இவர்களுக்கு சம்பளங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் மாட்டுக்குரிய உறுதிச்சீட்டுக்களை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டணமென்னும் வடிவத்திலும் வீதிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரிவு உத்தியோகத்தர் என்னும் உத்தியோக தோரணையில் தரகுப்பண வடிவத்திலும் வருமானத்தைப் பெற்றுக்கொண்டனர். இவர்களைத் தவிர வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நொத்தாரிசுகளும் கடமையாற்றியிருந்தனர். இதில் வவுனியா நொத்தாரிசு மாவட்ட வீதிப்பராமரிப்புக் குழுவின் லிகிதராகக் கடமையாற்றினார். இவ்வாறு உள்ளூர் நிர்வாக நடவடிக்கைகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட உள்ளூர் தலைவர்கள் வன்னி இராச்சியத்தை பிரித்தானியர்கள் கைப்பற்ற துணைபுரிந்தவர்கள் எனக்கருதப்படுகிறது. இருப்பினும் இப்பதவிகள் காலப்போக்கில் மறைந்துவிட்டன.

## பொருளாதாரமும் அபிவிருத்தி நடவடிக்கைகளும்

பிரித்தானியர்களின் ஆரம்ப காலப்பகுதியில் வன்னியில் நிலவிய பொருளாதார நடவடிக்கைகளை நோக்கின் அவை திருப்திகரமானதாக இருக்கவில்லையென்றே குறிப்பிடப்படவேண்டும். ஏனெனில் இக்காலப்பகுதியில் பாரிய புயல், வெள்ளப்பெருக்கு, தொற்றுநோய்கள் போன்றன அடிக்கடி இடம்பெற்றன. குறிப்பாக 1802, 1810, 1811 ஆம் ஆண்டுகளில் பாரிய வெள்ளப்பெருக்கும் 1805 ஆம் ஆண்டு பயங்கர புயலும் ஏற்பட்டுள்ளது. இதனால் அநேக குளங்கள் உடைப்பெடுத்தன. இருப்பினும் நிர்வாகிகள் குளங்களைத் திருத்துவதற்கு அதிக கவனம் செலுத்தவில்லை. இதனால் மக்கள் வன்னிப்பிரதேசத்திலிருந்து வெளியேறி வடக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் இடம் பெயர்ந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. 1860 களின் பின்னரே இப் பிரதேசங்களில்

நீர்ப்பாசனம் சம்பந்தமான பாரிய புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 1990 இல் நீர்ப்பாசனத்திணைக்களம் என்ற தனிப்பிரிவு தொடங்கப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் யாவும் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரின் கீழ் வந்தன.

இதேவேளை பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பகாலப் பகுதிகளில் வீதிகள், பாலங்கள் என்பவற்றை அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. வன்னிப்பெருநிலப்பரப்பில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் வன்னிப்பெருநிலப்பரப்புக்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையே தொடர்புகள் மேலும் வலுவடைந்தன. 1850 ஆம் ஆண்டு வடமாகாணத்திற்கான வரவு செலவு பற்றிய கூற்றொன்று வன்னிக்கு 175.00 ஸ்ரேலிங் பவுண் செலவிடப்பட்டது எனப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமயம்

வன்னிப் பிரதேச மக்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றும் நடவடிக்கைகளில் திருச்சபை மிசனரிச் சங்கம், வெஸ்லியன் மிசனரிச்சங்கம், அமெரிக்க சிலோன்மிசன் போன்றன ஈடுபட்டிருந்தன. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தீபகற்பத்தில் தமது செயற்பாடு களை நிலைநிறுத்திக் கொண்ட திருச்சபை மிசனரிச் சங்கம் வன்னிப் பிரதேசத்திலும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருந்தது. இங்குள்ள மக்களின் நிலை பரிதாபத்திற்குரியதென்றும் அந்த நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்றும் மிசனரிமார் எண்ணினர். இதனை மிசனைச் சேர்ந்த ஜியோ டானியேல் (Geo Daniel) என்பவரின் பின்வரும் கூற்றினூடாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

*"வன்னி மக்களை மதம் மாற்றுவதற்காக தான் கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டியவனாக இருந்தும் அவ்வாறு தானே அதைச் செய்யவில்லையென அறிக்கையிட்டு அங்கு பிரசன்னமாய் இருந்தவர்களிடம் சபையின் ஊழியர்கள் சிறந்த பலாபலன்களால் ஆசிர்வதிக்கப்பட்டு தமது பணியில் கடவுளின் வல்லமையையும் பிரசன்னத்தையும் உணரக்கூடியதாய் இருக்கவேண்டுமென பிரார்த்திக்கும்படி கேட்டார்"*

பிரார்த்தனைக்கான இந்த அழைப்பு வன்னி தமிழர் மத்தியில் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்புவதன் மூலம் அவர்களை கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதில் மிசனரிமார் எவ்வளவு ஆர்வமாக இருந்தனர் என்பதை மிகத்தெளிவாகத் தெரிவிக்கின்றது. ஊழியர் உளளூர் மக்களின் உதவியுடன் வன்னி மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் வீட்டிற்கும் சென்றனர் என்பதை மிசனரியின் திட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. இந்தப் பிரதேசங்களில் பயணம் செய்வது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அதாவது இப்பகுதிகளில் உள்ள சீரற்றவீதிகள் அவற்றின் இருமருங்கிலும் உள்ள காடுகள் என்பனவற்றினால் பயணஞ் செய்யமுடியாதிருந்ததுடன் ஆபத்தான காட்டுவிலங்குகளும் மலேரியநோயின் அச்சுறுத்தலும் கூட முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தன. அத்தோடு இப்பிரதேசத்து மக்கள் பெரும்பாலும் மதம் பற்றிய உணர்வு இல்லாமல் இருந்தமையும் இவர்களுடைய சிரமங்களை மேலும் அதிகரிக்கச் செய்தது. இருப்பினும் இக்காலத்தில் இப்பிரதேசத்தில் கல்வி, சமயச் செயற்பாடுகள் எதுவும் பிரவேசித்து இருக்காமையினால் சைவசமய மறுமலர்ச்சியாளர்களை விட கிறிஸ்தவ மிசன்களும்

அவர்களின் கல்வி முயற்சிகளும் இங்குள்ள மக்களுக்கு அறிவூட்டியிருந்தன எனக்கூறப்படுகின்றன.

அடுத்து திருச்சபை மிசனரிமாரைப் போன்று வெஸ்லியன் மிசனரிச் சங்கத்தினரும் வன்னிப்பிரதேசத்தில் மதம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். அவ்வகையில் 1855ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் திகதி மோணிங்ஸ்ரார்ரில் உள்ள அறிக்கையின்படி முல்லைத்தீவு மாவட்டம் வெஸ்லியன் மிசனின் கல்வி, மத முயற்சிகளுக்கு உட்பட்டதெனத் தெரிகின்றது. எனினும் கிழக்கு மாகாணத்துடன் ஒப்பிடுகையில் வன்னியில் சுதேசிகள் கிறிஸ்தவ மதத்தை தழுவியது மிகக்குறைவேயாகும். இப்பிரதேசங்களில் கிறிஸ்தவ மிசனரிச் சங்கம் குறைவான கவனத்தை செலுத்தியிருந்தமையும் இங்கு நிலையாக இருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வருடம் ஒரு தடவை மாத்திரம் இம்மக்களிடம் மதம் மாற்றும் நடவடிக்கைகளுக்காக சென்றமையும் இதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றது.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கசிலோன் மிசனும் தமது கல்வி, மத செயற்பாடுகளை சிறிய அளவில் விரிவாக்கம் செய்திருந்தது. 1863 ஆம் ஆண்டு உடுப்பட்டி – யாழ்ப்பாண அறிக்கையினூடாக இவர்கள் வன்னிப்பிரதேசங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் ஆகிய இடங்களிற்குச் சென்றனர் என்பதனை அறியமுடிகின்றது. இவ் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"ஏப்ரலில் நான் உங்களுக்கு எழுதிய பின்னர் சாண்டசும்(Sanders) நானும் இருப்பத்து மூன்று நாள் பயணமொன்றை வன்னியில் மேற்கொண்டிருந்தோம். நாம் மே 28 புறப்பட்டு ஜுன் 19 திரும்பினோம். இரு வேதாகம புத்தக விநியோகத்தர்கள் இரண்டு வினாவிடை உபதேசிமார், மட்டக்களப்பு பயிற்சிப் பாடசாலை இளைஞர் இருவர் ஆகியோர் எம்முடன் மாட்டு வண்டிப் பயணத்தில் இணைந்திருந்தனர். நாம் 227 மைல்கள் மாட்டு வண்டியிலும் மன்னாரிலிருந்து 70 மைல்கள் படகிலும் பயணித்து அறுபத்தைந்து கிராமங்களுக்கும் சென்றோம். அங்கு நாம் ஏறத்தாழ 5000 மக்களை குழுக்களாகவும் தனித்தனியாகவும் சந்தித்து உரையாற்றியதுடன் பல இடங்களில் நாம் சந்தித்தவர்களுடன் பிரார்த்தித்தோம். 497 புத்தகங்கள் 10.6 ஸ்ரேலிங்பவுண்களுக்கு விற்கப்பட்டன. இவற்றில் 206 சுவிசேஸ நூல்களும் வேதாகமப் பகுதிகளும் ஆகும். சங்கத்தின் 175 சிறு பிரசுரங்களும் கிட்டத்தட்ட 26000 பக்கங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இந்த ஊக்கமிகு முயற்சிகள் பெரும் பாலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டன".*

இவ்வாறு அமெரிக்க சிலோன் மிசன் வன்னியில் உள்ளூர் மக்கள் மத்தியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதனை இவ்வறிக்கையின் ஊடாக அறிய முடிகின்றது.

இருப்பினும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி செயற்பாடுகளும் பண்பாட்டு விழிப்புணர்ச்சிகளும் வன்னியிலும் தாக்கத்தைச் செலுத்தியிருந்தமையின் காரணமாக பிற்காலத்தில் இம்மிசனரியின் நடவடிக்கைகள் இங்கு குறைந்தளவிலான செல்வாக்கினையே பெறமுடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சமூகம்

பிரித்தானியரின் காலப்பகுதியில் வன்னிப் பிரதேசத்தின் சமூகக் கட்டமைப்பை பொறுத்தவரை பல்வேறு சமூகப் பிரிவு மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இவர்களுக் கிடையே சமூக அந்தஸ்து பொறுத்து ஏற்றத்தாழ்வுகள் நிலவியிருந்தன. இருப்பினும் இங்கு வாழும் எல்லாச் சாதியினருக்கும் பரம்பரைச் சொத்துரிமைச் சட்டம் ஒரே மாதிரியானதாகவே இருந்தன. ஒரு குடும்பத் தலைவனோ அல்லது குடும்பத் தலைவியோ இறந்தால் அவர்கள் இருவருக்கும் திருமண பந்தத்தால் பெறப்பட்ட சொத்துக்கள் ஆதனங்களில் அரைவாசி உயிருடனிருப்பவருக்கும் மிகுதி அரைவாசி பிள்ளைகளுக்கும் சமமாக பங்கிட்டு கொடுக்கப்படல் வேண்டும். திருமணத்தின் பின்னர் ஏதாவது சொத்துக்கள் வாங்கப்பட்டாலோ அல்லது விற்கப்பட்டாலோ அவைகளும் அவ்வாறே சமமாகப் பங்கிடப்பட்டு பிள்ளைகளுக்கு வழங்கப்படல் வேண்டும். குடும்பத் தலைவனோ அல்லது தலைவியோ மறுமணம் (இரண்டாவது திருமணம்) செய்தால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு முதல் திருமணத்தின் பின்வாங்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட சொத்துக்களில் அல்லது ஆதனங்களில் அரைவாசி பங்கிட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும். இரு திருமணங்களாலும் பிள்ளைப்பேறு இல்லாத போது சொத்துக்கள் அல்லது ஆதனங்கள் இறந்தவரின் மிகக்கிட்டிய சொந்தக்காரர் களுக்கு ஒப்படைக்கப்படலாம் (1818 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கலெக்டர் களின் அறிக்கையின் கூற்றுப்படி)

## முடிவுரை

எனவே முடிவாக தொகுத்து நோக்குமிடத்து கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட குடியேற்றத்தின் பயனாக தமிழ்நாட்டு மரபுக்கமைய "வன்னி" என அழைக்கப்பட்டு பல சிற்றரசுகளைக் கொண்டு வடக்கிலமைந்த யாழ்ப்பாண அரசுக்கோ, தெற்கிலமைந்த கண்டியரசுக்கோ அடங்காது அடங்காப்பற்றெனப் பெயர்பெற்று சுதந்திரமாகச் செயற்பட்ட இப்பிரதேசம் பண்டாரவன்னியனுடைய இறப்புடன் (1811 இன் பின்னர்) அந்நிய இனத்தவரான பிரித்தானியரின் ஏகாதிபத்தியத்திற்குள் முழுமையாக தன் இறைமையை இழந்து கொண்டது. இப்பிரித்தானியர் காலத்தில் பல்வேறுபட்ட நிர்வாக, பொருளாதார, சமய, சமூக, முறைகள் இங்கு பின்பற்றப்பட்டதை மேற்கூறப்பட்டவற்றினூடாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. லூயிஸ். ஜே. பிஇ : தமிழில் தமிராக்கக்குழு வன்னிஇ 2012, *இலங்கை வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு (வவுனியா – முல்லைத்தீவு)*, வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயபரிபாலனசபை, சேமமடு பதிப்பகம்.
2. குணசிங்கம். மு : 2004, *இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு*இ எம்.வி வெளியீடு, தென்னாசியாவில் மையம், சிட்னி.
3. பத்மநாதன். சி, 1982, *அடங்காப்பற்று வன்னிமைகள் 1658-1715*, பண்டாரவன்னியன்விழா மலர், வவுனியா.
4. தங்கேஸ்வரி.க : 2001, *வன்னியும் வன்னியரும் - ஈழமும்*, கொம்பறை வன்னி விழா மலர்05, இதழ்1000, வன்னித்தமிழ்ச்சமூக கலாசார மையம்இ கனடா.
5. அருணா செல்லத்துரை : 2004, *அடங்காப்பற்று வன்னி வரலாறு* பாகம் 3, 4, 5, அருணா வெளியீடு.


◆